ஈ.கே.எம்.அ.க.மதரஸா இஸ்லாமியா உயர்நிலைப்பள்ளி,
2021–22 பாடத்திட்டம், 3ஆம் பருவம்,
ஏழாம் வகுப்பு – தமிழ்
இயல் –1

**கவிதைப்பேழை - விருந்தோம்பல்**

**பொருள் கூறுக.**

1.மாரி - மழை 2.வறந்திருந்த - வறண்டிருந்த
3.புகவா - உணவாக 4.மடமகள் - இளமகள்
5.நல்கினாள் - கொடுத்தாள் 5.முன்றில் - திண்ணை

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1.மரம் வளர்த்தால்-------பெறலாம். **விடை:மாரி**
2.'நீருலையில்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது------------ **விடை: நீர் உலையில்.**
3.மாரி ஒன்று என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல்--- **விடை: மாரியொன்று.**

**குறுவினா விடை**

**1.பாரி மகளிரின் பெயர்களை எழுதுக.**
அங்கவை,சங்கவை.

**2.'பொருள் ஏதும் இல்லாத வீடுகளே இல்லை' - எவ்வாறு?**
வறட்சி காலத்தில், பாரி மகளிரிடம் பாணர்கள் இரந்து நின்றனர். அவர்கள் உலைநீரில் பொன் இட்டு அவர்களுக்குத் தந்தனர்.

**3.'ஒன்றாகு முன்றிலோ இல்'' என்னும் பழமொழியின் பொருள் யாது?** ''ஒன்றுமில்லாத வீடு எதுவுமில்லை''

**கற்கண்டு - அணி இலக்கணம்**

**1.உவமை,உவமேயம்,உவம உருபு விளக்குக.**
ஒப்பிட்டுக் கூறப்படும் பொருள் - உவமை.
உவமையால் விளக்கப்படும் பொருள் - உவமேயம்.
'போல'- உவம உருபு.

**2.உவமை அணிக்கும் எடுத்துக்காட்டு உவமை அணிக்கும் உள்ள வேறுபாடு யாது?**
உவமையும், பொருளும் வந்து உவம உருபு வெளிப்படையாக வந்தால் அது உவமை அணி. உவம உருபு மறைந்து வந்தால் எடுத்துக்காட்டு உவமை அணி.

**மொழியோடு விளையாடு**

தொடருக்குப் பொருத்தமான உவமையை எடுத்து எழுதுக.

1.என் தாயார் என்னை --------------------- காத்து வளர்த்தார். விடை:கண்ணை இமை காப்பது போல
2.நானும் என் தோழியும்-----------இணைந்து இருப்போம். விடை: நகமும் சதையும் போல
3.திருவள்ளுவரின் புகழை----------------- உலகமே அறிந்துள்ளது. விடை: உள்ளங்கை நெல்லிக்கனி போல
4.அப்துல் கலாமின் புகழ் ----------உலகமெங்கும் பரவியது. விடை: குன்றின் மேலிட்ட விளக்கு போல.
5.சிறுவயதில் நான் பார்தத நிகழ்ச்சிகள் ------------- என் மனத்தில் பதிந்தன. விடை: பசுமரத்தாணி போல.

**கொடுக்கப்பட்டுள்ள ஊரின் பெயர்களில் இருந்து புதிய சொற்களை உருவாக்குக.**

(எ.கா)திருநெல்வேலி - திரு, நெல், வேலி, வேல்
1.நாகப்பட்டினம் - விடை: நாகம், பட்டினம், பட்டி.
2.கன்னியாகுமரி - விடை: கன்னி, குமரி, மரி.
3.செங்கல்பட்டு - விடை: செங்கல், பட்டு,கல்.
4.உதகமண்டலம் - கமண்டலம், மண்டலம், உலகம்.
5,பட்டுக்கோட்டை - பட்டு, கோட்டை, படை, கோடை.

**இயல் -2**

**கவிதைப்பேழை-புதுமை விளக்கு**

**பொருள் கூறுக.**

1.வையம் - உலகம் 2.இடர் ஆழி - துன்பக்கடல்
3.சொல்மாலை - பாமாலை 4தகளி - அகல்விளக்கு
5.ஞானம் - அறிவு 6.ஆர்வம் - விருப்பம்
7.சுடர் - ஒளி 8.நாரணன் - திருமால்

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1)''இடர் ஆழி நீங்குகவே '' - இத்தொடரில் அடிக்கோடிட்ட சொல்லின் பொருள்- **விடை : துன்பம்**
2)'ஞானச்சுடர்' என்னும் சொல்லைப் பிரித்தெழுதக் கிடைப்பது----------. **விடை : ஞானம் + சுடர்**
3)இன்பு+ உருகு என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைப்பது--------. **விடை : இன்புருகு**

**குறுவினா விடை**

**1.பொய்கையாழ்வாரும் பூதத்தாழ்வாரும் அகல்விளக்காக எவற்றை உருவகப்படுத்துகின்றனர்?** பூமி - அன்பு

**2.பொய்கைஆழ்வார் எதற்காகப் பாமாலை சூட்டினார்?**
தன் துன்பக்கடல் நீங்க வேண்டிப் பாடலால் பொய்கைஆழ்வார் மாலை சூட்டினார்.

**3.அறக்கதிர் விளைய எதனை எருவாக இடவேண்டும் என முனைப்பாடியார் கூறுகிறார்?**
அறக்கதிர் விளைய **உண்மையை** எருவாக இடவேண்டும்.

**சிறுவினா விடை**

**1.பூதத்தாழ்வார் ஞானவிளக்கு ஏற்றும் முறையை விளக்குக.**
பூதத்தாழ்வார் அன்பை அகல்விளக்காகவும், ஆர்வத்தை நெய்யாகவும் , மனத்தைத் திரியாகவும் கொண்டு , ஞானவிளக்கை மனம் உருக திருமாலுக்கு ஏற்றினார்.

**கற்கண்டு-அணி இலக்கணம்**

**1.உருவக அணியை விளக்குக.**

உவமை ,பொருள் இரண்டும் ஒன்றே என்பது தோன்றும்படி கூறுவது உருவக அணியாகும்.
**சான்று :''வையகம் தகழி ''**

பூமி அகல் விளக்காக உருவகப்படுத்தப் பட்டுள்ளதால், உருவக அணி ஆயிற்று.

**2.உருவக அணிக்கும் ஏகதேச உருவக அணிக்கும் உள்ள வேறுபாடு யாது?**

| உருவக அணி | ஏகதேச உருவக அணி |
| --- | --- |
| இரு பொருள்களுக்கும் உருவகப்படுத்தும் | ஒன்றை உருவகப்படுத்தி மற்றொன்றை உருவகப்படுத்தாமல் வரும். |

**வாழ்வியல் - திருக்குறள்**

**பொருள் கூறுக.**

1.வினை-செயல் 2.பிணி-நோய் 3.மாட்சி -சிறப்பு

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்க.**

1)----ஒரு நாட்டின் அரணன்று. **விடை :வயல்**

2)மக்கள் அனைவரும் ------------- ஒத்த இயல்புடையவர்கள். **விடை : பிறப்பால்**

3) 'நாடென்ப' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது------------. **விடை : நாடு+ என்ப**

4.கண்+ இல்லது என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல்-----------. **விடை : கண்ணில்லது**

**குறுவினா விடை**

**1.ஒரு செயலைச் செய்ய எவற்றையெல்லாம் ஆராய வேண்டும்?**

பொருள் , கருவி ,காலம் ,செயலின் தன்மை , உரிய இடம்.

**2.ஒரு நாட்டுக்கு எவையெல்லாம் அரண்களாக அமையும்?**

1.நீர் 2.நிலம் 3.மலை 4.காடு

**3.சிறந்த நாட்டின் இயல்புகளாக வள்ளுவர் கூறுவன யாவை?**

பசி , நோய்,பகை ஆகியவை சேராமல் நல்லவகையில் நடைபெறுவதே நாடு ஆகும். பெரிய அளவில் முயற்சி இல்லாமல் வளம் தரும் நாடே சிறந்த நாடு.

**மொழியோடு விளையாடு**

**கீழ்க்காணும் சொற்களைப் பெயர்ச்சொல்லாகவும் வினைச்சொல்லாகவும் தொடர்கள் உருவாக்குக.**

( விதை , கட்டு, படி , நிலவு , நாடு , ஆடு)

விதை -1. எள்விதை வாங்கினான். 2.நெல் விதைத்தான்.

கட்டு - 1.கட்டுச்சோறு செய்தாள். 2.வீடு கட்டினான்.

படி - 1.படிக்கட்டில் வை. 2.திருக்குறள் படி.

நிலவு - 1.நிலவைப் பார்த்தான். 2.அதிக வெப்பம் நிலவுகிறது.

நாடு - 1.நாட்டை விரும்பு. 2.பள்ளியை நாடினான்.

ஆடு - 1.மாடு புல் தின்னும். 2.மயில் ஆடியது.

**இயல் -3**

**கவிதைப்பேழை - மலைப்பொழிவு**

**பொருள் கூறுக.**

1.சாந்தம் - அமைதி 2.மகத்துவம் - சிறப்பு

3.பேதங்கள் - வேறுபாடுகள் 4.தாரணி - உலகம்

5.இரக்கம் - கருணை 6.தத்துவம் - உண்மை

பாடநூல் மதிப்பீட்டு வினா

**சரியான விடையைத் தோந்தெடுத்து எழுதுக.**

1.மனிதவாழ்க்கையில் தேவைப்படுவது-----
விடை :பொறுமை

2. சாந்த குணம் உடையவர்கள் -முழுவதையும் பெறுவர்.
விடை: உலகம்

3.'மலையளவு' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது-------. விடை :மலை+ அளவு

4. 'தன்னாடு' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது---------------. விடை : தன் +நாடு

5. இவை + இல்லாது என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைப்பது---------------. விடை :இவையில்லாது

**குறுவினா விடை**

**1) இந்த உலகம் யாருக்கு உரியது?**

அமைதியான பண்பு கொண்டவர்களுக்கே இந்த உலகம் உரியது.

**2)உலகம் நிலைதடுமாறக் காரணம் யாது?**

சாதிகளும் கருத்து வேறுபாடுகளும் உலகம் நிலைதடுமாறக் காரணம் ஆகும்.

**3)வாழ்க்கை மலர்ச் சோலையாக மாற என்ன செய்ய வேண்டும்?**

வாழ்க்கை மலர்ச்சோலையாக மாற நல்ல உள்ளத்தோடு வாழ வேண்டும்.

**சிறு வினாவிடை**

**1.சாந்தம் பற்றி இயேசு காவியம் கூறுவன யாவை?**

சாந்தம் என்ற அமைதியான பண்பு கொண்டவர்களுக்கே இந்த உலகம் உரியது.

அவர்களே தலைவர்கள் என்ற உண்மையை இயேசுநாதர் கூறினார்.

**உரைநடை உலகம் - கண்ணியமிகு தலைவர்**

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. காயிதேமில்லத் -------------- பண்பிற்கு உதாரணமாகத் திகழ்ந்தார். விடை : எளிமை

2. 'காயிதேமில்லத்' என்னும் அரபுச்சொல்லுக்குச் ----------என்பது பொருள். விடை : சமுதாய வழிகாட்டி

3. விடுதலைப்போராட்டத்தின் போது காயிதேமில்லத் ------- இயக்கத்தில் கலந்துகொண்டார்.
விடை : ஒத்துழையாமை

4. காயிதேமில்லத் தமிழ்மொழியை ஆட்சிமொழியாக்க வேண்டும் என்று பேசிய இடம்------------.
விடை : நாடாளுமன்றம்

5. 'எதிரொலித்தது' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது----------.விடை : எதிர் + ஒலித்தது

6.முதுமை + மொழி என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ------------.விடை : முதுமொழி

**குறுவினா விடை**

**1.காயிதேமில்லத் அவர்கள் பற்றி தந்தை பெரியார் கூறியது யாது?**

இப்படிப்பட்ட தலைவர் கிடைப்பது அரிது. அவர் நல்ல உத்தமமான மனிதர்.'' என்று தந்தைப் பெரியார் கூறினார்.

**2.காயிதேமில்லத் அவர்கள் பற்றி அறிஞர் அண்ணா கூறியது யாது?**

"தமிழக அரசியல் வானில் கவ்வியிருந்த காரிருளை அகற்ற வந்த ஒளிக்கதிராகக் காயிதேமில்லத் முகமது இஸ்மாயில் அவர்கள் திகழ்கிறார்''

**3.காயிதேமில்லத் - பெயர்க்காரணம் யாது?**

காயிதேமில்லத்தின் இயற்பெயர் முகமது இசுமாயில். ஆனால் மக்கள் அன்போடு காயிதேமில்லத் என்று அழைத்தனர். காயிதேமில்லத் என்பதன் பொருள் சமுதாய வழிகாட்டி. அப்பெயருக்கு ஏற்ப வழிகாட்டியாகத் திகழ்ந்தார்.

சிறுவினா விடை

**1.காயிதேமில்லத்தின் கல்விப்பணி குறித்து எழுதுக.**

காயிதேமில்லத் கல்வி நிறுவனங்களை உருவாக்க நினைத்தார்.திருச்சியில் ஜமால் முகமது கல்லூரியை உருவாக்கினார். கேரளாவில் ஃபரூக் கல்லூரி உருவாக காரணமாக இருந்தார்.

**2. காயிதேமில்லத் மேற்கொண்ட அரசியல் பணிகள் யாவை?**

சென்னை மாகாண சட்டமன்ற உறுப்பினர்.இந்திய அரசியலமைப்பு உருவாக்கக் குழு உறுப்பினர்.இந்தியா விடுதலை பெற்றபின் மாநிலங்களவை உறுப்பினர். மக்களவை உறுப்பினர்.

**கற்கண்டு – ஆகுபெயர்**

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1.பொருளின் பெயர் அதன் உறுப்புக்கு ஆகிவருவது------------. **விடை :பொருளாகுபெயர்**

2.இந்த வேலையை முடிக்க ஒரு கை குறைகிறது என்பது------------. **விடை : சினையாகுபெயர்**

3.மழை சடசடவெனப் பெய்தது. - இத்தொடரில் அமைந்துள்ளது----------. **விடை : இரட்டைக்கிளவி**

4.அடுக்குத்தொடரில் ஒரே சொல் ----------முறை வரை அடுக்கி வரும். **விடை : இ)நான்கு**

**குறுவினா விடை**

**1.ஒரு பெயர்ச்சொல் எப்போது ஆகுபெயர் ஆகும்?**

ஒரு பெயர்ச்சொல் அதன் பொருளைக் குறிக்காமல் , அதனோடு தொடர்பு உடைய வேறு ஒன்றிற்கு வரும் போது அது ஆகுபெயர் ஆக மாறும்.

**2.இரட்டைக்கிளவி என்பது யாது ? சான்று தருக.**

இரட்டையாக வந்து ,பிரித்தால் தனிப்பொருள் தராத சொற்கள் இரட்டைக்கிளவி ஆகும்.சான்று :சடசட

**சிறு வினா விடை**

**1.பொருளாகுபெயரையும் சினையாகுபெயரையும் வேறுபடுத்துக.**

| பொருளாகு பெயர் | சினையாகு பெயர் |
|---|---|
| ஒரு பொருளின் பெயர் சினை(உறுப்பு)க்கு ஆகிவருவது பொருளாகு பெயர். | சினையின் பெயர் பொருளுக்கு ஆகிவருவது சினையாகுபெயர். |

**2.இரட்டைக்கிளவி , அடுக்குத்தொடர் ஒப்பிடுக.**

| அடுக்குத்தொடர் | இரட்டைக்கிளவி |
|---|---|
| பிரித்தால் பொருள் தரும். | பிரித்தால் பொருள் தராது. |
| நான்கு முறை வரை அடுக்கி வரும். | இரண்டு முறை மட்டுமே வரும். |
| சொற்கள் தனியே நிற்கும். | சொற்கள் இணைந்தே நிற்கும். |

**மொழியை ஆள்வோம்**

**சரியான இணைப்புச் சொல்லால் நிரப்புக.**

(எனவே , ஏனெனில் , அதனால் , ஆகையால் , அது போல , இல்லையென்றால் , மேலும் )

(எ.கா.) காயிதே மில்லத் அவர்கள் மகிழுந்தில் பயணம் செய்ய விரும்பாதவர். <u>ஏனெனில்</u> அவர் எளிமையை விரும்பியவர்.

1.நாம் இனிய சொற்களைப் பேச வேண்டும். <u>இல்லையென்றால்</u> துன்பப்பட நேரிடும்.

2.குயிலுக்குக் கூடுகட்டத் தெரியாது. <u>ஆகையால்</u> காக்கையின் கூட்டில் முட்டையிடும்.

3. அதிக அளவில் மரங்களை வளர்ப்போம். <u>ஏனெனில்</u> மரங்கள் தான் மழைக்கு அடிப்படை.

4. பிறருக்குக் கொடுத்தலே செல்வத்தின் பயன். <u>எனவே</u> பிறருக்குக் கொடுத்து மகிழ்வோம்.

5.தமிழகத்தில் மழை பெய்து வருகின்றது. <u>மேலும்</u> இரண்டு நாட்கள் மழை நீடிக்கும் என வானிலை ஆய்வு மையம் அறிவிப்பு.

## விரிவானம்

**1.டி.கே.சி குறிப்பிடும் திருநெல்வேலிக் கவிஞர்கள் பற்றிய செய்திகளைத் தொகுத்து எழுதுக.**

**முன்னுரை:**

திருநெல்வேலிப் பகுதியைச் சேர்ந்த புலவர்களைப் பற்றி அறிந்து கொள்வோம்.

**திருநெல்வேலிக் கவிஞர்கள்**

1.கவிமணி ,பாரதியார் ஆகியோர் பிறந்து வளர்ந்த இடம் எட்டையபுரம். அங்கே சுமார் இருநூறு வருடங்களுக்கு முன் இருந்தவர் கடிகைமுத்துப் புலவர், அவர் வெங்கடேசுர எட்டப்ப ராஜாவைப் பற்றிப் பல பாடல்கள் பாடியிருக்கிறார்.

2.பிள்ளைப்பெருமாள் சீவைகுண்டத்துப் பெருமாளைப் பற்றிப் பாடியுள்ளார்.

3.கொற்கையில்சுமார் இரண்டாயிரம் வருடத்துக்கு முன்னிருந்த ஒரு பெருங்கவிஞர் முத்தொள்ளாயிர ஆசிரியர்.

4. திருஞான சம்பந்தர் குற்றாலத்திற்கு வந்தார். நுண் துளி தூங்கும் குற்றாலம் என்று பாடினார். திரிகூடராசப்பக் கவிராயர் திருக்குற்றாலக் குறவஞ்சி பாடினார்.

**முடிவுரை**

போற்றுதலுக்குரிய நகர் திருநெல்வேலி என்பதை அறியமுடிகின்றது.

# பொதுக்கட்டுரை

### 1.என்னைக் கவர்ந்த நூல்- திருக்குறள்

**முன்னுரை:**

என்னைக் கவர்ந்த நூல் திருக்குறள் ஆகும். அதனைப் பற்றிக் காண்போம்.

**அமைப்பு:**

திருக்குறள் அறத்துப்பால்,பொருட்பால்,இன்பத்துப்பால் என மூன்று பிரிவுகளைக் கொண்டுள்ளது. 133 அதிகாரங்கள்,1330 குறட்பாக்களைக் கொண்டுள்ளத. இந்நூலை திருவள்ளுவர் இயற்றியுள்ளார்.

**சிறப்பு**

1.மதம்,மொழி,இனம்,சாதி,நாடு ஆகியவை கடந்த நூல்.
2.மனிதன் மனிதனுக்காக இயற்றப்பட்ட நூல்.
3.உலகப் பொதுமறை என்று அழைக்கப்படும் நூல்.

**கவர்ந்த காரணம்:**

மனிதன் நல்வாழ்வு வாழவும்,அவனை நெறிப்படுத்துவும் அழகான கருத்துகளைக் கூறியுள்ளது. படிப்பதற்கு எளிமையான வரிகளைக் கொண்டுள்ளது.

**முடிவுரை:**

திருக்குறள் படித்தேன், என்னைக் கவர்ந்தது. நீங்களும் படியுங்கள்!

### 2. ஒற்றுமையே உயர்வு

**முன்னுரை**

ஒற்றுமையே வலிமை என்பது பழமொழி. ஒற்றுமையின் உயர்வு குறித்து இனி காண்போம்

**உயர்வு**

வீட்டில் ஒற்றுமையாக இருந்தால் குடும்பம் உயர்வடையும். அந்த ஊர் உயரும் , அந்த நகரமே உயரும். நம் நாடே உயரும். ஒற்றுமையாகச் செயல்பட்டதால் விடுதலையும் கிடைத்தது.

**விளைவு**

இயற்கைச் சீற்றங்கள் ஏற்படும் போது மக்கள் ஒன்று கூடி மக்களைக் காப்பற்றினர். பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பொருட்களையும் வழங்கி , பாதிக்கப்பட்டவர்களின் வாழ்விடங்களை மீண்டும் கட்டமைத்துக் கொடுத்தனர்.

**ஒருமை**

மும்மதக் கடவுள்களும் அன்பால் ஒன்றுபட்டு நிற்பதைப் பார்க்கும் போது நாம் அனைவரும் ஒன்றுபட்டு வாழவேண்டும் என்பதை நாம் புரிந்து கொள்ளவேண்டும்.

**முடிவுரை**

வேறுபாடு இன்றி மக்கள் ஒற்றுமையாக வாழ வேண்டும். அப்பொழுது தான் நாட்டில் ஒற்றுமை ஏற்படும்.

# கடிதம் எழுதுக.

**உங்கள் ஊரில் நடைபெறும் திருவிழாவைக் காண வருமாறு அழைப்பு விடுத்து உறவினர் ஒருவருக்குக் கடிதம் எழுதுக.**

**23,கவிமணி நகர்,**
**ஈரோடு – 1,**
**நாள்:---------.**

**அன்புள்ள அத்தைக்கு,**

அண்ணன் மகன் எழுதும் கடிதம். அனைவரும் நலமாக இருக்கின்றோம். அதுபோல அங்கு அனைவரும் நலமா?அடுத்த மாதம் முதல் வாரம் முதல் எங்கள் ஊரில் திருவிழா நடைபெற இருக்கின்றது. ஒரு வாரம் இத்திருவிழா நடைபெறும். தாங்களும் மாமாவும் அவசியம் கலந்துகொள்ள வேண்டும். அன்புடன் முடிக்கின்றேன்.

**இப்படிக்கு,**
-----------------

**உறைமேல் முகவரி**

**பெறுநர் :**

த.பாரதி,
56,வைகை நகர்,திருச்சி -2.

# பொருத்துக.

1.நாற்று - நடுதல்
2.நீர் - பாய்ச்சுதல்
3.கதிர் - அறுத்தல்
4.களை - பறித்தல்
5.தண்பொருநை - தாமிரபரணி.
6.அக்கசாலை - பொன்நாணயங்கள் உருவாக்கும் இடம்
7.கொற்கை - முத்துக்குளித்தல்
8.திரிகூடமலை - குற்றாலம்.
9.அன்பு - தகளி
10.ஆர்வம் - நெய்
11.சிந்தை - இடுதிரி
12.ஞானம் - விளக்கு
13. விளைநிலம் - இன்சொல்
14. விதை - ஈகை
15. களை - வன்சொல்
16. உரம் - உண்மை
17.எளிது - அரிது.
18.ஈதல் - ஏற்றல்.
19.அந்நியர் - உறவினர்.
20.இரவலர் - புரவலர்.
21.சாந்தம் - அமைதி
22.மகத்துவம் - சிறப்பு
23.தாரணி - உலகம்
24.இரக்கம் - கருணை

**ஆக்கம்:**

ச. சேட்டு மதார்சா,
ப. ஆ. தமிழ், ஈ. கே. எம். அ. க. மதரஸா இஸ்லாமியா உ. பள்ளி
ஈரோடு - 638001.
அலைபேசி : 8883681115